இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
முகாமைத்துவ கற்கைநெறி பீடம்

முயற்சியாண்மை மற்றும் சிறுவணிக முகாமைத்துவ உயர்தர சான்றிதழ் கற்கைநெறி (ESBM)

**AFU 2406 - முயற்சியாளருக்கான நிதி மற்றும் கணக்கீடு**
**இறுதித் தேர்வு - 2023/2024**
**காலம்: 02 மணித்தியாலங்கள்**

**திகதி: 18.08. 2024** **நேரம்: மு.ப 9.30- மு.ப 11.30**

அறிவுறுத்தல்கள்:

- இந்த வினாத்தாள் ஐந்து (05) வினாக்களைக் கொண்டுள்ளது. வினா ஒன்று (01) உட்பட நான்கு (04) வினாக்களுக்கு பதிலளிக்கவும்
- இந்த வினாத்தாள் ஐந்து (05) பக்கங்களைக் கொண்டுள்ளது
- அனைத்து வினாக்களுக்கும் சம புள்ளிகளை கொண்டுள்ளது (ஒவ்வொன்றிற்கும் 25 புள்ளிகள்)
- நிரல்படுத்தப்படாத கணிப்பான்களின் பயன்பாடு அனுமதிக்கப்படுகிறது

**வினா எண். 01 (கட்டாய வினா)**

31 மார்ச் 2024 இல் உள்ளவாறான, பின்வரும் பரிட்சைமீதி சம் டாம் வணிகத்திலிருந்து பிரித்தெடுக்கப்பட்டுள்ளது.

**சாம் டாம் வணிகத்தின்**
**31 மார்ச் 2024 இல் உள்ளவாறான பரீட்சை மீதி**

**பெறுமதி ரூபா "000"**

| | வரவு (ரூ) | செலவு (ரூ) |
|---|---|---|
| விற்பனைகள் | | 17,000 |
| கொள்வனவுகள் | 9,000 | |
| **ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் - கிரயத்தில்** | | |
| காணி மற்றும் கட்டடம் | 6,500 | |
| விநியோக லொரி | 2,700 | |
| கணனிகள் | 1800 | |
| **திரண்ட பெறுமானத் தேய்வு - 01/04/2023 இல் உள்ளவாறான.** | | |
| கட்டடம் | | 750 |
| விநியோக லொரி | | 300 |
| கணனிகள் | | 840 |
| 01 ஏப்ரல் 2023 இல் இருப்புகள் | 4,500 | |
| வியாபாரப் பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகள் | 2,400 | 3,600 |
| 01 ஏப்ரல் 2023 இல் ஐயக் கடன் ஏற்பாடு | | 240 |
| சம்பளங்கள் | 1,000 | |
| கையிலுள்ள காசு | 7,000 | |
| 01 ஏப்ரல் 2023 இல் உள்ளவாறான மூலதனம் | | 15,770 |
| முதலீட்டு வருமானம் | | 1,500 |
| மின்சாரக் கட்டணம் | 600 | |
| வங்கியிலுள்ள காசு | 1,000 | |
| தொலைபேசிக் கட்டணம் | 3,500 | |
| | **40,000** | **40,000** |

மேலதிகத் தகவல்கள் பின்வருமாறு;

1) 31 மார்ச் 2024 இல் உள்ளவாறான இறுதி இருப்பு ரூ 4,750,000 ஆக மதிப்பிடப்பட்டுள்ளது மற்றும் அதன் தேறிய நிகரத்தகு பெறுமதியானது ரூ.4, 500,000.
2) 2024 மார்ச் மாதத்துக்கான மின்சாரக்கட்டணம் ரூ. 55,000 இன்னும் செலுத்தப்படவில்லை
3) 01 ஏப்ரல் 2023 முதல் எதிர் வருகின்ற 14 மாதத்துக்கான தொலைபேசி கட்டணம் செலுத்தப்பட்டது.
4) பெறப்பட்ட முதலீட்டு வருவாயில், 90% மட்டுமே நடப்புக் கணக்கீட்டு காலத்திற்குச் சொந்தமானது மற்றும் மீதமுள்ளது அடுத்த கணக்கீட்டு க் காலத்திற்கானது.
5) ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களானது நேர்கோட்டு முறையினை அடிப்படையாகக் கொண்டு கிரயத்தில் தேய்மானமிடப்படல் வேண்டும்.
   - கட்டிடம் : 10% (நிலத்தின் கிரயம் ரூ.5,000,000.)
   - விநியோக லொரி : 10%
   - கணினிகள் : 15%
6) உரிமையாளர் கடன்பெறுனரிடம் இருந்து பெற வேண்டிய ரூ.100,000/-ஐ அறவிடமுடியக்கடனாக பதிவழிப்பதுடன் 31 மார்ச் 2024 இல் உள்ளவாறான வியாபாரப் பெறுவனவுகளின் மீதியில் 5% பொது ஐயக் கடனாக ஏற்பாடு செய்ய முடிவு செய்தார்.

பின்வருவனவற்றை நீங்கள் தயார் செய்ய வேண்டும்:

I. 31 மார்ச் 2024 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக்கூற்று
II. 31 மார்ச் 2024 இல் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று

**(25 புள்ளிகள்)**

**வினா எண். 02**

I. ஒரு வணிகத்தின் கணக்கீட்டு செயற்பாட்டின் முக்கிய நோக்கத்தை சுருக்கமாக விளக்குக. (03 புள்ளிகள்)

II. ஒரு வணிகத்தின் ஆறு அக்கறைதாரர் பெயரைக் குறிப்பிடவும் மேலும் அடையாளம் காணப்பட்ட ஒவ்வொரு அக்கறைதாரரின் வணிகத்தின் மீதான ஆர்வத்திற்கான காரணத்தையும் குறிப்பிடவும். (12 புள்ளிகள்)

III. பின்வரும் பரிவர்த்தனைகள் Paypall நிறுவனங்களின் கணக்குப் புத்தகங்களிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டுள்ளன. இந்த பரிவர்த்தனைகளை முதன்மை கணக்கீட்டு சமன்பாட்டில் பதிவுசெய்யவும்.

i. திரு. பெரேரா கணனி உதிரிப்பாக வணிகத்தினை *Paypall* வணிக மையம் எனும் பெயரில் ஆரம்பித்தார் அதற்கு ரூ.850,000 காசாகவும்,ரூ. 500,000 பெறுமதியான தளபாடத்தினையும் மேலும் ரூ.750,000 பெறுமதியான லொறி ஒன்றினையும் முதலிட்டார்.
ii. வணிகமானது ரூ.450,000 பெறுமதியுள்ள இருப்பினை ரூ.200,000 காசாகவும் மிகுதித் தொகையினை 15 நாட்களுக்குள் செலுத்துவதாக உறுதியளித்து ஜான் கணினிகள் எனும் விநியோகத்தரிடமிருந்து கொள்வனவு செய்தார்.
iii. ரூ. 120,000 பெறுமதியான இருப்புகள் ரூ.150,000 இற்கு சிவாவிற்கு விற்பனை செய்யப்பட்டது.
iv. ரூ. 10,000 பெறுமதியான இருப்புகள் தீயில் எரிந்து கருகியது.
v. செலுத்திய மின் கட்டணம் ரூ. 4,500
vi. திரு. பெரேரா அவரது தனிப்பட்ட பயன்பாட்டிற்காக வணிகத்திலிருந்து ரூ. 200,000 காசாக பற்றினார்.
vii. ஜான் கணினிகளுக்கான நிலுவைத் தொகையை வணிகம் செலுத்தியது. மற்றும் செலுத்திய தொகையில் 5% காசுக்கழிவு பெறப்பட்டது.
viii. திரு. சிவா தனது நிலுவைத் தொகையினை செலுத்தினார் இதற்கு இவருக்கு ரூ.5000 கழிவு வழங்கப்பட்டது.

ix. வணிகமானது ரூ 10,000 இனை நன்கொடையாக குழந்தைகள் இல்லத்திற்கு வழங்கியது.

x. திரு.பெரேரா ரூ.50,000 வைப்பிலிட்டு வங்கியில் நடைமுறைக்கு கணக்கினைத் தொடங்கினார். (10 புள்ளிகள்)

**(25 புள்ளிகள்)**

**வினா எண். 03**

I. வங்கி கணக்கிணக்கக் கூற்றினை தயாரிப்பதற்கான காரணம் என்ன? (02 புள்ளிகள்)

II. ஒரு வங்கியின் நடைமுறைக்கணக்கினையும் மற்றும் சேமிப்புக்கணக்கினையும் வேறுபடுத்துக. (04 புள்ளிகள் )

III. "நேரடியாக பணம் அனுப்புதல் (Direct Remittance)" மற்றும் " நிலையான கட்டளை (Standing Order)" ஆகிய சொற்களை வரையறுத்து ஒவ்வொன்றிற்கும் ஒரு உதாரணம் தருக. (05 புள்ளிகள் )

IV. 31 மே 2024 அன்று, அமயா நிறுவனத்தின் பணப்புத்தகத்தின் வங்கி நிரலின் வரவு மிகுதி ரூ.13600 இருந்தது. இந்த மிகுதியானது அதே திகதியின் வங்கி கூற்றில் கொடுக்கப்பட்ட மிகுதியுடன் சமப்படவில்லை மற்றும் பின்வரும் பரிவர்த்தனைகள் வேறுபாடுகளினை ஏற்படுத்தியது.

i. வணிகத்தினால் காசோலை புத்தகக் கட்டணம் ரூ.750 பதிவு செய்யப்படவில்லை.

ii. காப்புறுதிக்கான நிலையான கட்டளை ரூ.2,500 வங்கியால் நேரடியாக செலுத்தப்பட்டது.

iii. கடன்பட்டோரான திரு. அவிந்தா தனது நிலுவைத் தொகையான ரூ. 15,000 ஐ வங்கியில் நேரடியாக வைப்பு செய்தார், அவர் இதனை வணிகத்திற்கு தெரிவிக்கவில்லை.

iv. மே மாதத்தில் சமர்ப்பிக்கப்பட்ட மற்றும் வைப்பிலிடப்பட்ட காசோலைகள் பற்றிய விபரங்கள் பின்வருமாறு.

| | |
|---|---|
| CH0100 | ரூ.12,000 பெறுமதியான காசோலை மே 15 அன்று திரு. டியானுக்கு வழங்கப்பட்டது, ஆனால் ஒரு மாதத்திற்குள் வங்கியில் சமர்பிக்கப்படவில்லை. |
| CH1715 | ரூ.5,000 பெறுமதியான காசோலை மே 30 ஆம் தேதி வைப்பிலிடப்பட்டது, ஆனால் அந்த மாதத்திற்குள் தேறவில்லை. |
| CH1329 | ரூ.2,500 பெறுமதியான காசோலை வணிகத்தால் 28 ஏப்ரல் 2024 அன்று வைப்பிலிடப்பட்டது. இது 2 மே 2024 அன்று வங்கியால் மதிக்கப்படவில்லை. இது வணிகத்தால் இன்னும் சரிசெய்யப்படவில்லை. |

v. புத்தகக் காப்பாளரினால் தவறுதலாக ரூ. 2000 வங்கிக் கணக்கில் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

மே. 2024 மாதத்திற்கான செம்மையாக்கப்பட்ட காசேடு மற்றும் வங்கி கணக்கிணகக்கூற்று ஆகியவற்றை தயாரிக்குக. (14 புள்ளிகள்)

**(25 புள்ளிகள்)**

***வினா எண். 04***

I. நீங்கள் ஒரு நிறுவனத்தின் இயக்குநக் குழு உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளீர்கள் எனக் கருதுக. நிறுவனம் இரண்டு மாற்று திட்டங்களைப் பெற்றுள்ளது, அவற்றில் ஒன்றை செயல்படுத்துவதற்குத் தெரிவு செய்ய வேண்டும். அடுத்த நான்கு ஆண்டுகளுக்கான இரண்டு திட்டங்களின் முன்னறிவிக்கப்பட்ட பண வரவுகள் மற்றும் வெளியேற்றங்கள் பின்வருமாறு;

| | | பெறுமதி "000" |
|---|---|---|
| **ஆண்டு** | **திட்டம் A** | **திட்டம் B** |
| | **தேறிய காசுப்பாய்ச்சல் (ரூ)** | **தேறிய காசுப்பாய்ச்சல் (ரூ)** |
| 0 | (48,000) | (48,000) |
| 1 | 13,000 | 13,000 |
| 2 | 17,000 | 11,500 |
| 3 | 15,500 | 19,000 |
| 4 | 8,500 | 9,000 |

i. ஒவ்வொரு திட்டத்தின் முதலீடு மீட்புக்காலங்களைக் (Pay back period) கணக்கிட்டு, மிகவும் பொருத்தமான திட்டத்தைக் கண்டறியவும். (5 புள்ளிகள்)

ii. முதலீட்டாளரின் தேவையான வருவாய் விகிதம் (RRR) 10% எனில், ஒவ்வொரு திட்டத்தின் தேறிய நிகழ்காலப் பெறுமதியைக் (NPV) கணக்கிட்டு, முதலீட்டாளரால் எந்தத் திட்டத்தைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று பரிந்துரைக்கவும்? (10 புள்ளிகள்)

II. "Cute Looks " என்பது ஒரு ஆடம்பரமான அலங்காரங்களைத் உற்பத்தி செய்யும் நிறுவனமாகும், இது சமீபத்தில் வெளிநாட்டிலிருந்து 100 அலகுகளைத் தயாரிப்பதற்கான கட்டளையொன்றினை ஏற்றுக்கொண்டது. கட்டளை தொடர்பான தகவல்களைக் பின்வருமாறு தரப்பட்டுள்ளன;

| | பெறுமதி ரூபாவில் |
|---|---|
| 01/04/2023 இல் ஆரம்ப இருப்புகள் (மூலப் பொருட்கள்) | 45,000 |
| <u>உற்பத்தி தொடர்பான செலவுகள்</u> | |
| மூலப்பொருள் கொள்வனவு | 23,000 |
| கட்டிட வாடகை | 1,500 |
| மின்சார கட்டணம் | 1,200 |
| உற்பத்தி ஊழியர்களுக்கான கூலி | 40,000 |
| மேற்பார்வையாளர் சம்பளம் | 25,000 |
| இயந்திர பழுது | 2,750 |
| உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் இயந்திரத்தின் தேய்மானம் | 250 |
| துப்புரவு செலவுகள் | 1,250 |
| தரகு கூலி | 10,250 |

நீங்கள் பின்வருவனவற்றைக் கணிப்பீடுக. கணக்கிடுவதற்கு மேற்கொள்ளும் அனுமானங்களை தெளிவாக குறிப்பிடுக .

i. முதன்மைக் கிரயம்
ii. மேந்தலைக்கிரயம்
iii. மொத்தக் கிரயம்
iv. ஒரு அலகுக்கானக் கிரயம்

(10 புள்ளிகள்)
**(25 புள்ளிகள்)**

**வினா எண். 05**

I. 31/03/2023 இல் முடிவடைந்த ஆண்டிற்கான Avon விநியோகஸ்தர்களின் பரீட்சை மீதி சமப்படுத்தப்படவில்லை மற்றும் வித்தியாசம் ரூ. 13,500 என அடையாளம் காணப்பட்டது. வித்தியாசம் ஒரு தொங்கல் கணக்கில் செலவு வைக்கப்பட்டுள்ளது மற்றும் விசாரணையில், பின்வரும் தவறுகள் அடையாளம் காணப்பட்டன.

1) மின் கட்டணம் ரூ. 12,500 மின் கட்டணக் கணக்கில் இரண்டு முறை தவறுதலாகப் வரவு வைக்கப்பட்டுள்ளது. இருப்பினும், இது காசுப்புத்தகத்தில் சரியாக பதிவு செய்யப்பட்டுள்ளது.
2) தரகு வருமானம் ரூ. 6,000 காசுக் கணக்கு மற்றும் தரகு வருமானக் கணக்கு இரண்டிலும் வரவு வைக்கப்படுள்ளது.
3) ரூ.13, 000 மதிப்புள்ள ஸ்டேஷனரிகளை வாங்குவது செலவினங்கள் கணக்கில் சரியாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது, ஆனால் இது விற்பனை கணக்கில் செலவு வைக்கப்பட்டுள்ளது.
4) வாடகைச் செலவு ரூ. 5,500 வாடகை வருமானக் கணக்கில் செலவு வைக்கப்பட்டுள்ளது. இருப்பினும், இது பணப் புத்தகத்தில் சரியாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.
5) துப்புரவு செலவுகள் ரூ.3,500 கணக்கு புத்தகங்களில் இருந்து முழுமையாக தவறவிடப்பட்டுள்ளது.

நீங்கள் செய்ய வேண்டியது;

i. மேற்குறிப்பிட்ட வழுக்களை திருத்துவதற்கான நாட்குறிப்புப் பதிவினைத் தயாரிக்குக (10 புள்ளிகள்)

ii. தொங்கல் கணக்கைத் தயாரிக்குக. (5 புள்ளிகள்)

II. பின்வரும் தலைப்புகளுக்கு சிறு குறிப்புகளை எழுதவும்.

i. வணிக அலகு எண்ணக்கரு
ii. அட்டுறு எண்ணக்கரு
iii. சமபாட்டுப்புள்ளி பகுப்பாய்வு (Break Even Analysis)
iv. ஒரு பண்டத்தின் நிலையான கிரயம் மற்றும் மாறும் கிரயம்
v. நீண்ட கால உற்பத்தி மற்றும் குறுகிய கால உற்பத்தி

(10 புள்ளிகள்)

**(25 புள்ளிகள்)**

-பதிப்புரிமையுடையது -